# Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: 94-11-269-3831~3, FAX: 94-11-269-8629
E-mail: cultujpn@co.mofa.go.jp /www.lk.emb-japan.go.jp

**PRESS RELEASE**

ஒக்டோபர் ***27th 2011***

## ஜப்பான் வடக்கில் யுத்ததால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் மீளிணைப்பு மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு IOM மூலமாக உதவி வழங்குகிறது

ஜப்பானிய அரசாங்கம் வடக்கில் யுத்ததால் பாதிக்கப்படட சமூகங்களின் மீளிணைப்பு மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளுக்கு 122 மில்லியன் யப்பானிய யென் நிதிப்பங்களிப்பை (அண்ணளவாக 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) IOM நிறுவனத்தினூடாக வழங்க தீர்மானித்திருக்கிறது. இந்த நன்கொடையானது புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் போராளிகள் மற்றும் மோதல்களால் பாதிக்கப்படட்ட குழுக்களை சமூகத்தில் மீளிணைத்துக்கொள்ளத்தக்க சமூக நலத்திட்டங்களுக்கும் சமூக நல்லிணக்க நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படும்.

இது தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிதொ ஹொபொ மற்றும் IOM தலைமைப் பிரதிநிதி திரு. ரிச்சட் டேன்சிகர் ஆகியோருக்கிடையே ஜப்பானிய தூதுவரகத்தில் இன்று கைச்சாத்திடப்பட்டது. “இந்நிதியானது சமூக பொருளாதார மற்றும் மீளிணைப்பு பூர்வாங்க வேலைகளுக்கு மிகவும் திறனாக பயன்படுத்தப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்பதை நாம் எதிர்பார்க்கிறோம்,” என்று ஜப்பானிய தூதுவர் கௌரவ. திரு. நொபுஹிதொ ஹொபொ கூறினார்.

வட மாகாணத்திற்கான ஜப்பானின் சகல உதவிகளும் பரந்துபட்ட வழிகளில் அபிவிருத்தியை மேம்படுத்துவடன் மனிதாபிமான தேவைகளுக்கும் தொடர்ச்சியாக பங்களித்து வருகிறது. ஜப்பானின் தறபோதைய வட மாகாணத்தற்கான வேலைத்திட்டங்களில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை மேம்பாட்டுத்திட்டம், வவுனியா-கிளிநொச்சி மின்னிணைப்பு கட்டுமானம், கண்ணிவெடியகற்றழுக்கான உதவி, யாழ்பாண மன்னார் மாவட்டங்களின் அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் வாழ்வாதார உதவி எனபன உள்ளடங்குகின்றன. இம்முயற்சிகளானது வட மாகாண மற்றும் சூழவுள்ள பிரதேச மக்கள் தமது வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்ப உதவும் என ஜப்பான் எதிர்பார்க்கிறது.

ஜப்பானிய தூதுவரகமானது வட மாகாணத்தின் மீளெழுச்சிக்கும் (recovery) இலங்கையின் அபிவிருத்திக்கும் தனது துரிதமான உதவிகளை இலங்கை அரசாங்கம், சர்வதேச சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுனங்களின் கூட்டுறவுடன் தொடர்ந்து வழங்கும்.

********************************************************************************

Please contact the Economic Cooperation Section of the Embassy for further information, Tel: 011-269-3831-3 (Ext.227)